தயாரிப்பு : S. வசந்தமூர்த்தி
இ/ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்
Department of Education, Sabaragamuwa Province / Weekly School

**தேர்ச்சி 01 :** பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** பொருட்கள், சேவைகளின் கொள்வனவு மூலம் தேவைகளும் விருப்பங்களும் திருப்திப்படுத்தப்படும் முறையைக் காட்டுவார்.

தேவைகள் - மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான விடயங்கள் தேவைகள் எனக் கூறப்படும்.
உதாரணம் : உணவு, உடை, உறையுள்

விருப்பங்கள் - தேவைகளை நிறைவேற்றும் பல்வேறுபட்ட வடிவங்கள் விருப்பங்கள் எனப்படும்.
உதாரணம்: தேவை - உணவு .
விருப்பங்கள் - சோறு, பாண், இடியப்பம், ரொட்டி

மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் பண்டங்கள்.

1. பொருளாதாரமல்லாப் பண்டம்/இலவச பண்டம்/ இயற்கைப் பண்டம்/ செலவில்லாப் பண்டம்.
2. பொருளாதாரப் பண்டம்.

மனித விருப்பங்களைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் எல்லா உள்ளீடுகளும் "**வளங்கள்**" என்றழைக்கப்படும்.

**இயற்கை வளங்கள் இருவகைப்படும்.**

1. மீள உருவாக்கக்கூடிய வளங்கள் (புதுப்பிக்கக்கூடிய வளங்கள்)
2. மீள உருவாக்க முடியாத வளங்கள் (புதுப்பிக்க முடியாத வளங்கள்)

**பயிற்சிகள் :**

01. பண்டம், இலவசப் பண்டம், பொருளாதாரப் பண்டம் ஆகியவற்றை விளக்குக.

02. பொருளாதாரப் பண்டங்கள் சில வேளைகளில் இலவசமாக வழங்கப்பட்டாலும் அவை இலவசப்பண்டங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இக்கூற்றின் உண்மைத்தன்மையை ஆராய்க.

03. இயற்கை வளங்களின் பயன்பாட்டின் போது கவனம் செலுத்தப்படாவிடில் சர்வதேச ரீதியாக ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?